**செய்தி வெளியீடு எண். 386** **நாள்.12.03.2022**

**செய்தி வெளியீடு**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் பாரதியாரின் நினைவைப் போற்றும் வகையில் அவர் மறைந்த நூற்றாண்டில் 14 முக்கிய அறிவிப்புகளை அறிவித்தார்கள். அதில், பாரதியார் நினைவு நூற்றாண்டை முன்னிட்டு அடுத்த ஓராண்டிற்கு சென்னை பாரதி நினைவு இல்லத்தில் வாரந்தோறும் நிகழ்ச்சி ஒன்று செய்தித் துறையினரால் நடத்தப்படும் என அறிவித்தார்கள்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பினை செயல்படுத்தும் வகையில் 04.12.2021 சென்னை திருவல்லிக்கேணி பாரதியார் நினைவு இல்லத்தில் பெரும்புலவன் பாரதி மறைந்த நூற்றாண்டின் நினைவாக அவரது பெருமைகளை புகழ்பாடும் ஓராண்டு தொடர் நிகழ்ச்சிகளை மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் திரு. மு.பெ.சாமிநாதன் அவர்கள் தொடங்கி வைத்தார்கள்.

அதன் தொடர்ச்சியாக இன்று 12.03.2022 சென்னை திருவல்லிக்கேணி பாரதியார் இல்லத்தில், சென்னை முதன்மைக் கல்வி அலுவலரின் நேர்முக உதவியாளர் முனைவர் இரா. சி. ஸ்ரீபிரியா அவர்கள் மகாகவி பாரதியார் அவர்களின் நினைவுகளைப் போற்றிச் சிறப்பிக்கும் வகையில், விளக்கவுரையாற்றினார். மேலும், சென்னை, எழும்பூர், மாகாண அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளி மாணவிகளின் வில்லுப்பாட்டு இயல், இசை, நாடக நிகழ்ச்சியும், சென்னை, அசோக் நகர், அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளி மாணவிகளின் பரத நாட்டிய நிகழ்ச்சியும், மகாகவி பாரதியாரின் பாடல்களுக்கு சென்னை, எழும்பூர், கேரளா வித்தியாலயம் மேல்நிலைப் பள்ளி மாணவிகளின் குழுப்பாட்டு, குழு நடன நிகழ்ச்சியும் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில், செய்தி மக்கள் தொடர்புத் துறை துணை இயக்குநர் திரு.வி.என்.அண்ணாதுரை, அவர்கள் உதவி இயக்குநர் திரு.த.கலைச் செல்வன் அவர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர். முன்னதாக செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் திரு. எஸ்.எம்.திவாகர் வரவேற்று பேசினார். இறுதியாக செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் திரு. சி.எஸ்.ரமேஷ் நன்றியுரை ஆற்றினார்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**